பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

04 01 2025 **SATURDAY** 12 40 **PM** ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கிராமப்புற மக்களின் கண்ணியமான வாழ்விற்கு உதவும் சிறப்பான திட்டங்களை அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாட்டில் ஊரகப் பகுதிகளில் வறுமை நிலை கடந்த நிதியாண்டில் நான்கு புள்ளி எட்டு ஆறு சதவீதமாக குறைந்துள்ளதாக பாரத ஸ்டேட் வங்கியின் அறிக்கை தெரிவித்துள்ளது.

3. தமிழகத்தில், சாத்தூர் அருகே இயங்கி வந்த பட்டாசு ஆலையில் நிகழ்ந்த வெடிவிபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

4. இயற்கை பேரிடர் மற்றும் பல்வேறு மோதல்கள் காரணமாக, எத்தியோப்பியாவில் 90 லட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் பள்ளிகளுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக யுனிசெஃப் தெரிவித்துள்ளது.

5. இந்தியாவுக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 181 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

>>>>><<<<<

கிராமப்புறங்களை வளர்ச்சி மற்றும் வாய்ப்புகளுக்கான மையங்களாக மாற்றுவதன் மூலம் நாட்டின் கிராமப்புறங்களுக்கு அதிகாரமளித்தல் குறித்த அரசின் தொலைநோக்குப் பார்வையை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று கிராமப்புற பாரத திருவிழாவை அவர் தொடங்கி வைத்தார்.

கிராமப்புற மக்களின் கண்ணியமான வாழ்விற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் அரசு தொடர்ந்து செயல்பட்டு வருவதாக பிரதமர் கூறினார்.

இதை நோக்கமாக கொண்டு, அனைத்து கிராமங்களிலும் அடிப்படை வசதிகளை உறுதி செய்யும் வகையில், அரசு செயலாற்றி வருவதாக அவர் தெரிவித்தார். கிராமப்புற சமூகத்தினர் சுயசார்புடன் திகழும் வகையில், பிரதமரின் வேளாண் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ், 3 லட்சம் கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அப்பகுதி மக்களின் வளர்ச்சி மற்றும் நலன்களை கருத்தில் கொண்டு, தூய்மை பாரதம் இயக்கம், பிரதமரின் வீட்டு வசதி திட்டம், நீர்வள இயக்கம் உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

லட்சக்கணக்கான கிராமங்களுக்கு நாள்தோறும் தூய்மையான குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட ஆயுஷ்மான் ஆரோக்கிய மையங்கள் மூலம் மக்களுக்கு சிறந்த சுகாதார சேவைகள் கிடைத்து வருவதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

கிராமங்களில் உள்ள மருத்துவமனைகளில் சிறந்த மருத்துவர்கள் சேவையாற்றி வருவதாக அவர் கூறினார்.

பயிர் காப்பீட்டு திட்டம் மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது குறித்தும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த கிராமப்புற பாரத திருவிழா நாட்டிற்கு புதிய அடையாளத்தை பெற்றுத் தருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பின்னர் பிரதமர், பல்வேறு துறைகளைச் சார்ந்த கலைஞர்களுடன் உரையாடியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த திருவிழா இன்று முதல் 9ஆம் தேதிவரை புதுதில்லி பாரத் மண்டபத்தில் நடைபெறுகிறது.

>>>>><<<<<

தெலங்கானா மாநிலம், ஹைதராபாதில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கோல்கொண்டா கோட்டையில் 'ராணுவம் குறித்து அறிந்து கொள்ளுங்கள்' என்ற கண்காட்சி இன்று தொடங்கியது.

மூன்று நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியை மாநில ஆளுநர் திரு. ஜிஷ்ணு தேவ் வர்மா தொடங்கி வைத்தார்.

காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறும் இந்த கண்காட்சியில் ராணுவ உபகரணங்கள், செயல்பாட்டு திறன்கள் மற்றும் உள்நாட்டு கண்டுபிடிப்புகள் காட்சிப்படுத்தப்படுகிறது.

>>>>><<<<<

மத்தியப்பிரதேச மாநிலம், **Dhar** மாவட்டம் **Pithampur**–ல் உள்ள யூனியன் கார்பைடு தொழிற்சாலையின் கழிவுகளை அகற்றுவதற்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டம் தொடர்பாக, அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ், உயரதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்த கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொதுமக்களின் உணர்வுகளுக்கு அரசு மதிப்பளிப்பதாகவும், இவ்விவகாரம் தொடர்பான நடைமுறை சிக்கல்கள் குறித்து உயர்நீதிமன்றத்தில் தெரிவிக்கவிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தவறான தகவல்களையோ, வதந்திகளையோ நம்ப வேண்டாம் என்றும் மக்களை திரு. மோகன் யாதவ் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

நாட்டில் ஊரகப் பகுதிகளில் வறுமை நிலை கடந்த நிதியாண்டில் நான்கு புள்ளி எட்டு ஆறு சதவீதமாக குறைந்துள்ளது என்று பாரத ஸ்டேட் வங்கியின் அறிக்கை தெரிவித்துள்ளது.

இது முன்னதாக, கடந்த 2011-12ஆம் நிதியாண்டில் 25 புள்ளி ஏழு சதவீதமாக இருந்தது என்றும் அது கூறியுள்ளது.

அத்துடன், நகர்ப்புற வறுமை நிலை, கடந்த 12 ஆண்டுகளில் 13 புள்ளி ஏழு சதவீதத்திலிருந்து 4 புள்ளி பூஜ்யம் ஒன்பது சதவீதமாக குறைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

உலக பிரெய்லி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

பார்வை மாற்றுத்திறனாளிகளுக்காக பிரெய்லி முறையை வடிவமைத்த லூயிஸ் பிரெய்லியின் பிறந்த தினமான ஜனவரி 4ஆம் தேதி பிரெய்லி தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, புதுதில்லியில் தேசிய பார்வை மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பு சார்பில் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பேசிய அந்த கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் திரு. **Rungta,** பிரெய்லி முறையை அனைவரும் கையாளும் வகையில் தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அனைத்து துறையிலும் பிரெய்லி முறையை பயன்படுத்த இளைஞர்கள் முன்வர வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இந்நாளையொட்டி, பிரெய்லி முறையில் படித்தல், எழுதுதல், விவாதங்கள் மேற்கொள்ளுதல் போன்ற நிகழ்ச்சிகளுக்கு நாடுமுழுவதும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

**>>>>><<<<<**

தமிழகத்தில், விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அருகே பொம்மையாபுரம் என்ற கிராமத்தில் இயங்கி வந்த பட்டாசு ஆலையில் நிகழ்ந்த வெடிவிபத்தில் 6 பேர் உயிரிழந்தனர். மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - கமலக்கண்ணன் 32 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

தலைநகர் தில்லியில் காற்று மாசு அதிகரித்து வருவதை அடுத்து, அத்தியாவசியமற்ற கட்டுமானப் பணிகளுக்கும், சாலை அமைக்கும் பணிகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தில்லி மற்றும் குருகிராம், ஃபரிதாபாத், காஸியாபாத், கவுதம்புத் நகர் ஆகிய மாவட்டங்களில் **BS-3** ரக பெட்ரோல் வாகனங்களையும், **BS-4** ரக டீசல் நான்கு சக்கர வாகனங்களையும் இயக்குவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை நிலவரப்படி தில்லியில் காற்றின் தரக்குறியீடு 385 என்ற அளவில் மிக மோசமாக நிலவியதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

**>>>>><<<<<**

பொங்கல் பண்டிகையை ஒட்டி, தெற்கு ரயில்வே சிறப்பு ரயில்களை இயக்கவுள்ளது.

அதன்படி, திருநெல்வேலியிலிருந்து தாம்பரத்திற்கு இம்மாதம் 12, 19, 26 ஆகிய தேதிகளில் காலை மணி 4.10-க்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

மறுமார்க்கத்தில் 13, 20, 27 ஆகிய தேதிகளில் மாலை மணி 3.30-க்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று கூறியுள்ளது.

அதேபோல், தாம்பரத்திலிருந்து கன்னியாகுமரிக்கு இம்மாதம் 13ஆம் தேதி இரவு மணி 10.30க்கு சிறப்பு ரயில் இயக்கப்படும் என்றும், மறுமார்க்கத்தில் 14ஆம் தேதி மாலை மணி 3.30-க்கு கன்னியாகுமரியிலிருந்து இந்த ரயில் இயக்கப்படும் என்றும் தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இயற்கை பேரிடர் மற்றும் பல்வேறு மோதல்கள் காரணமாக, எத்தியோப்பியாவில் 90 லட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் பள்ளிகளுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக யுனிசெஃப் தெரிவித்துள்ளது.

எத்தியோப்பியாவில் நிலவும் சூழ்நிலை குறித்து யுனிசெஃப் வெளியிட்டுள்ள அறிக்கையில், பருவநிலை மாற்றம் மற்றும் வன்முறை காரணமாக, கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகள் மூடப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

அத்துடன், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகளில் 18 சதவீத பள்ளிகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, அந்நாடுகளில் குழந்தைகள் கல்வி கற்பதற்கு தடை ஏற்பட்டுள்ளதாகவும், பாதுகாப்பின்மை நிலவுவதாகவும் யுனிசெஃப் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி, தனது இரண்டாவது இன்னிங்ஸில் இன்றைய ஆட்டநேர இறுதியில் 6 விக்கெட் இழப்புக்கு 141 ரன் எடுத்துள்ளது.

ரிஷப் பந்த் 61 ரன்னுக்கு ஆட்டமிழந்தார்.

ரவீந்திர ஜடேஜா 8 ரன்னுடனும், வாஷிங்டன் சுந்தர் 6 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

சிட்னியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஒரு விக்கெட் இழப்புக்கு 9 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் தொடர்ந்து ஆடிய ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் 181 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக வெப்ஸ்டர் 57 ரன் எடுத்தார்.

இந்திய அணியின் பந்துவீச்சாளர்கள் மொஹமது சிராஜ், பிரசித் கிருஷ்ணா ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், பும்ரா, நிதிஷ்குமார் ரெட்டி ஆகியோர் இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இந்திய அணி தற்போது 145 ரன் முன்னிலை பெற்றுள்ளது.

**>>>>><<<<<**

ஆக்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின், இறுதி தகுதிச் சுற்று ஆட்டத்திற்கு இந்தியாவின் சுமித் நாகல் முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற முதலாவது தகுதி சுற்று ஆட்டத்தில் அவர், 1-6, 6-3, 6-1 என்ற செட்கணக்கில் நியூஸிலாந்தின் **Alexander-**ஐ வென்றார்.

**>>>>><<<<<**

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் இன்றைய ஆட்டங்களில் தில்லி அணி – பெங்கால் அணியையும், ஹைதராபாத் அணி – ஒடிசா அணியையும் எதிர்கொள்கின்றன.

**>>>>><<<<<**

**I.S.L** கால்பந்து போட்டியில் இன்று புவனேஷ்வரில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் கோவா – ஒடிசா அணியையும், சென்னையில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஜாம்ஷெட்பூர் - பெங்களூரு அணியையும் எதிர்கொள்கின்றன.

**>>>>><<<<<**